# தூதன்

தூதன்-24 | பிப்ரவரி 2015 | தூது-02

"பயப்படாதே, நான் உன்னோடே இருக்கிறேன்...."
ஏசாயா 43:5



## தென் இந்தியத் திருச்சபை
## தமிழ் சபை - துபாய்

Private Circulation only

# தென் இந்தியத் திருச்சபை
# தமிழ் சபை - துபாய்


| | |
|---|---|
| சபை போதகர் மடல் | 02 |
| ஆயரம்மா மடல் | 04 |
| உதவி போதகர் மடல் | 06 |
| உதவி ஆயரம்மா மடல் | 08 |
| செயலர் மடல் | 10 |
| பயனுள்ள உபவாசம் | 12 |
| நீங்கள் கிறிஸ்தவரா... | 13 |
| தேவாலயம் | 14 |
| திருச்சபை ஜெபநாள் | 16 |
| தெரிந்து கொள்வோம் | 18 |
| ஆராதனை பாடல்கள் | 20 |
| Youth and Teenagers | 21 |
| Family Devotion | 22 |
| வேதவினா போட்டி | 24 |
| Health Tips | 26 |
| Birthday Celebrants | 28 |
| Wedding Anniversary Celebrants | 30 |



P.O.Box: 8785, Dubai. Ph: 04-2824696, Fax: 04-2826162, Mob: 050-5533645
Website: www. csitamilparishdubai.org, E-mail: csitapar@emirates.net.ae

# சபை போதகர் மடல்

கிறிஸ்துவுக்குள் மிகவும் அன்பானவர்களே, நம்மையெல்லாம் படைத்து பாதுகாத்து, வழிநடத்தி வரும் ஆண்டவர் இயேசுகிறிஸ்துவின் இனிய பெயரில் அன்பின் வாழ்த்துக்கள். கர்த்தருடைய பிள்ளைகளாக வாழ்ந்து கொண்டிருக்கும் நாம் சாட்சியின் பிள்ளைகளாக வாழ அழைக்கப் படுகிறோம். இயேசுகிறிஸ்து தன்னுடன் இருந்த அடியவர்களுக்கு உபதேசங்களைக் கொடுத்து சாட்சிகளாக வாழ ஆலோசனைக் கொடுத்தார்.

"நீங்களும் ஆதிமுதல் என்னுடனே கூட இருந்தபடியால் எனக்குச் சாட்சிகளாயிருப்பீர்கள்." யோவான் 15:27.

இயேசுகிறிஸ்து தம்முடைய அடியவர்களுக்கு சாட்சிகள் என்று பெயரிட்டார். இன்று கிறிஸ்துவில் காணும் அனுபவங்களைச் சாட்சிகளாக வெளிப்படுத்த வேண்டும். நாம் வாழும் இடங்களில் எப்படி சாட்சிகளாக வாழமுடியும்.

### 1. ஒருவரிலொருவர் அன்பாக இருக்கவேண்டும் (யோவான் 15:9,12,17):

மனிதர்கள் தங்களுடைய வாழ்வில் வெளிப்படுத்த வேண்டிய உயரிய பண்பு அன்பு. அன்பு பற்றிய நீண்ட பட்டியலை பவுல் அப்போஸ்தலன் 1 கொரிந்தியர் 13-ம் அதிகாரத்தில் தெளிவாக குறிப்பிடுகிறார். கிறிஸ்து இந்த உலகின் மக்கள்மீது கொண்ட அன்பின் அடிப்படையில் நன்மையானவைகளைச் செய்தார். கிறிஸ்து திருக்குமாரனாக உலகில் தோன்றியதே மனுமக்கள்மீது கொண்ட அன்பேயாகும் (யோவான் 3:16). பவுல் அப்போஸ்தலன், அன்பினால் ஒருவரையொருவர் தாங்கவேண்டும் என்கிறார். 1 யோவான் 4:7-ல் ஒருவரிலொருவர் அன்பாயிருக்கக் கடவோம் என்றும், அன்புள்ள எவனும் தேவனால் பிறந்திருக்கிறான் என்றும் கூறப்பட்டுள்ளது. 1 யோவான் 4:8-ல் அன்பில்லாதவன் தேவனை அறியான் என வசனம் கூறுகிறது. பிறரிடம் அன்பு செலுத்தாமல் தூய ஆவியரின் வரங்களைப்பெற இயலாது. நாம் இயேசுவின் பிள்ளைகள் என்றால் பிறரிடம் அன்பு செலுத்தி சாட்சிகளாய் இருக்கவேண்டும்.

### 2. கற்பனைகளின்படி நடக்கவேண்டும் (யோவான் 15:10,14):

கர்த்தருடைய பிள்ளைகளாக வாழுகின்றவர்கள் அவருடைய கற்பனைகளின்படி நடக்கவேண்டும். இஸ்ரவேல் மக்கள் கற்பனைகளின்படி நடந்தபோது மேன்மையான அனுபவங்களை அடைந்தனர். மேலும் கற்பனைகளின்படி நடக்க ஆலோசனைகள் தரப்பட்டுள்ளன.

கட்டளைகளின்படி செய்யும்போது சகல ஜாதிகளிலும் உன்னை மேன்மையாக வைப்பார் என வசனம் கூறுகிறது (உபாகமம் 28:1-14). இஸ்ரவேலர் விடுதலை பயணத்தில் கடவுளை விட்டு, கற்பனைகளை விட்டு விலகிச் சென்றனர். அப்பொழுது அவர்களுக்கு எச்சரிப்பின் சத்தம் கொடுத்தார். என்னிடத்தில் அன்பு கூர்ந்து, என் கற்பனைகளைக் கைக்கொள்ளுகிறவர்களுக்கு ஆயிரம் தலைமுறை மட்டும் இரக்கஞ் செய்கிறவராயிருக்கிறேன் (உபா.5:10). இன்று கர்த்தருடைய பிள்ளைகளாக இருக்கும் நாம் கட்டளைகளுக்குச் செவிகொடுத்து கீழ்படிந்து அவருடைய பிள்ளைகளாக வாழும்போது அவரால் ஆசீர்வதிக்கப்படுவோம். அவரது கற்பனைகளைக் கைக்கொண்டு அவரது அன்பிலே நிலைத்திருப்போம்.

### 3. கனி கொடுக்கிறவர்களாக இருக்கவேண்டும் (யோவான் 15:16):

நீங்கள் என் நாமத்தினாலே, பிதாவைக் கேட்டுக்கொள்வதெதுவோ, அதை அவர் உங்களுக்குக் கொடுக்கத்தக்கதாக நீங்கள் போய் கனி கொடுக்கும்படிக்கும், உங்கள் கனி நிலைத்திருக்கும்படிக்கும் நான் உங்களை ஏற்படுத்தினேன். இன்று கனியுள்ள வாழ்வு வாழ நாம் அழைக்கப்பட்டுள்ளோம். அதற்கு கிறிஸ்துவில் நிலைத்திருக்க வேண்டும் (யோவான் 15:2,5). கனியுள்ள வாழ்வு வெளிப்படும்போது அதனால் பிதா மகிமைப்படுவார் (யோவான் 15:8). ஆவிக்கேற்றபடி வாழ ஆவியின் கனியுடையவர்களாக வாழ வேண்டியது அவசியம்.

இன்று சாட்சிகளாக வாழ அழைக்கப்பட்டுள்ள நாம் ஒருவரிலொருவர் அன்புகொண்டு, கட்டளைகளுக்குக் கீழ்படிந்து, கனியுள்ள வாழ்வு வாழ நம்மை ஆயத்தப்படுத்துவோம். இறையாசி நம்மில் தங்குவதாக.

இறைப்பணியில்,
அருள்திரு. J. ஜெயக்குமார்.
சபை போதகர்.

## சபை சந்திப்பு

இந்த மாதம் Sharjah A & B பகுதியிலுள்ள
சபையார் இல்லங்களை சந்திக்க முடிவு செய்யப்பட்டுள்ளது.
மற்ற பகுதியில் உள்ளவர்கள் எந்த நேரத்தில் அழைத்தாலும்
சபையாரை இல்லங்களில் சந்திக்க ஆயத்தமாய் இருக்கிறோம்.
சபை போதகர்.

# ஆயரம்மா மடல்

அன்பானவர்களே, அன்பர் இயேசுவின் இனிய பெயரில் அன்பின் வாழ்த்துக்கள். இந்த புதிய மாதம் நமக்கு ஆசீர்வாதமும், மனமகிழ்ச்சியும் நிறைந்த மாதமாக அமைவதாக. இந்த நாளில் புத்திசாலித்தனமாக வாழ்ந்த அபிகாயில் குறித்து சிந்திப்பது நமக்கு ஆசீர்வாதமாக அமையும் என்று நம்புகிறேன்.

..... அந்த ஸ்திரீ மகா புத்திசாலியும் ரூபவதியுமாயிருந்தாள்..... 1 சாமு.25:3

மாகோன் என்னுமிடத்தில் காலேப்பின் சந்ததியில் நாபால் என்னும் செல்வந்தன் வாழ்ந்து வந்தான். அவனது மனைவிதான் அபிகாயில். அபிகாயில் என்ற பெயருக்கு மகிழ்ச்சியின் ஊற்று என்று பொருள். அவள் மகா புத்திசாலியும் ரூபவதியுமாயிருந்தாள். அவள் தன் கணவர் நாபாலினால் தனக்கும், தன் குடும்பத்துக்கும் வர இருந்த பெரும் ஆபத்திலிருந்து தப்பித்துக்கொள்ள புத்திசாலித்தனமாகச் செயல்பட்டாள். தாவீது தனக்கும் தனது ஆட்களுக்கும் உதவி செய்யுமாறு நாபாலிடம் ஆட்களை அனுப்பினான். நாபால் ஏளனமாக பேசி உதவி செய்ய மறுத்தான். இதனால் தாவீது 400 மனிதர்களுடன் கடுங்கோபமாக புறப்பட்டான். அப்போது இந்த அபிகாயில் தாவீதிடம் முறையிட்ட காரியம் மேன்மையானது. அவையாவன

1. புத்திசாலித்தனம்:

கணவரால் ஆபத்து வந்திருக்கிறது என்பதைக் கண்டபோது, கணவரோடு வாக்குவாதம் பண்ணாமல் தன் புத்திசாலித்தனத்தால் தாவீதிடம் ஞானமாகப் பேசினாள். தாவீது இஸ்ரவேலின் மேல் இராஜாவாகும்போது துக்கமும் மன இடறலும் இல்லாமல் இருக்க, இரத்தம் சிந்தாமலும், பழி வாங்காமலும் இருக்கவேண்டும் எனத் தாழ்மையாகப்பேசி தாவீதைக் கவர்ந்தாள். தாவீதுக்கு அபிகாயில் கொடுத்த ஆலோசனை நல்லதாகக் காணப்பட்டது. ஆகையினால் தாவீது, உன்னை இன்றைய தினம் என்னைச் சந்திக்க அனுப்பின இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தருக்கு ஸ்தோத்திரம். நீ சொல்லிய யோசனை ஆசீர்வதிக்கப்படுவதாக. நான் இரத்தம் சிந்த வராதபடிக்கும், என் கையே பழிவாங்காதபடிக்கும், நீ இன்றைய தினம் எனக்குத் தடைபண்ணினபடியால் நீயும் ஆசீர்வதிக்கப் படுவாயாக என்றான் (1 சாமு.25:32,33).

2. சமாதான முயற்சி :

தாவீதிடம் சமாதானம் பெற்றால்தான் உயிர் வாழமுடியும். இல்லையெனில் செத்து மடிய வேண்டியிருக்கும் என்பதை அறிந்த அபிகாயில் தாவீதுக்கு முன்பாக முகங்குப்புற விழுந்து தன் கணவனின் தவறைத் தன்மீது சுமத்திக் கொண்டாள். உமது அடியாளின் பாதகத்தை மன்னியும், காணிக்கையை ஏற்றுக்கொள்ளும். நீர் உயிரோடே இருக்கும் நாளில் ஒரு பொல்லாப்பும் உம்மிலே காணப்படாதிருப்பதாக என்று சொல்லி சமாதானப்படுத்தினாள் (1 சாமு.25:24,27,28). கணவன் செய்த தவறைத் தான் செய்ததாகவே ஏற்றுக்கொண்டு தாழ்மையாய், புத்திசாலித்தனமாய் பேசி வரவிருந்த பேராபத்துக்கு கணவனையும், தன்னுடையவர்களையும் பாதுகாத்துக் கொண்டாள்.

இன்று கர்த்தருடைய பிள்ளைகளாக வாழ்ந்து வரும் நாமும் புத்திசாலித்தனமாக வரவிருக்கும் பேராபத்துகளுக்கு நம்மையும், நம் குடும்பத்தையும் விலக்கிக் காக்க இறை ஆற்றலைப் பெற்றவர்களாக வாழ கர்த்தர் துணைசெய்வாராக.

இறைப்பணியில்,
உங்கள் சகோதரி,
திருமதி. சாலினி ஜெயக்குமார்.

## NEW ARRIVALS



"பிள்ளைகள் கர்த்தரால் வரும் சுதந்திரம்"

Shevina Vijil
D/o. Mr.Vijil Singh & Mrs.Shermil Fredita Vijil
16-12-2014

Baby Girl
D/o. Mr.Edwin Rajkumar & Mrs.Jenni Edwin
01-01-2015

Baby Boy
S/o. Mr.Masil Raja Dhas & Mrs.Abisha Masil
20-01-2015

Meshak
S/o. Mr.Murthy & Mrs.Salini Murthy
24-01-2015

# உதவி போதகர் மடல்

கிறிஸ்துவுக்குள் உன்னதங்களிலே ஆவிக்குரிய சகல ஆசீர்வாதங்களினாலும் நம்மை ஆசீர்வதித்திருக்கிற நம்முடைய பிதாவாகிய தேவனாலே உங்களுக்குக் கிருபையும் சமாதானமும் உண்டாவதாக.

## திருமறை ஆய்வு ரோமர் 6-ம் அதிகாரம்

"பாவத்தின் சம்பளம் மரணம், தேவனுடைய கிருபை வரமோ நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினால் உண்டான நித்திய ஜீவன்" ரோமர் 6:23.

அப்போஸ்தலர் பவுல் மனுக்குலத்தோடு இணைந்து நிற்கின்ற 3 காரியங்களை ரோமருக்கு எழுதிய கடிதத்தில், இந்த அதிகாரத்தில் குறிப்பிடுகிறார்.

**1. மனுக்குலமும் மீறுதலும் :** மீறுதல் பெருகும்படிக்கு நியாயப்பிரமாணம் காரணமாயிற்று எனக் குறிப்பிடும் பவுல், பாவம் பெருகின இடத்தில் கிருபை பெருகிற்று என்கிறார். பாவம் என்பது நற்செயலுக்கு எதிரான மீறுதலின் வெளிப்பாடு. கடவுள் நியாயப்பிரமாணத்தின் வழியாக மனுக்குலத்திற்குச் 'செய்' என்று சொல்லும்போது செய்யாதிருப்பதும், 'செய்யாதே' எனக்கூறும்போது செய்வதும் மீறுதல் என்பதற்கு விளக்கமாய் அமைகிறது. இக்குறிப்பினை 3 கேள்விகளோடு நம்மைச் சிந்திக்க வைக்கிறார்.

1. கிருபை பெருகும்படிக்கு பாவத்திலே நிலைநிற்கலாம் என்று சொல்லலாமா? (6:1)
2. பாவத்திற்கு மரித்த நாம் இனி அதிலே எப்படிப் பிழைப்போம்? (6:2)
3. கிருபைக்குக் கீழ்பட்டிருக்கிறபடியால் பாவம் செய்யலாமா? (6:15)

இவற்றிற்கு விடைகளை பரிசுத்த வேதாகமத்தைத் திறந்தால், நமக்கு சொல்லப்படும் பதில்

- பாவம் நிறைந்த சந்ததி அழிக்கப்பட்டது. (உ.ம்) நோவாவின் காலத்தில், லோத்துவின் நாட்களில்
- பாவம் மிகுந்த சந்ததி சிதறடிக்கப்பட்டது (உ.ம்) பாபேல் கோபுரம் கட்டப்பட்ட காலத்தில்
- பாவம் நிறைந்த சந்ததி அடிமைப்படுத்தப்பட்டது. (உ.ம்) எகிப்தின் அடிமைத்தனம், பாபிலோனின் சிறையிருப்பு

இப்படிமனுக்குலம் மீறுதலால் சந்தித்த விளைவுகளை நாம் காணலாம்.

**2. மனுக்குலமும் மரணமும் :** ஒரு மனிதனின் உலக வாழ்வு மரணத்தோடு முடிவடைகிறது. பொதுவாக, இறப்பு மனிதனின் இயற்கையான முடிவாகவும் ஏற்றுக் கொள்ளப்படுகிறது. குறிப்பாக நிறைந்த வாழ்நாட்களோடு பூரண வயதில் இறப்பதை நல்ல முடிவாகவும், உரிய காலத்திற்கு முன்பே ஏற்படும் அகால மரணங்களை கசப்பான முடிவாகவும் கருதுகிறோம்.

யோவான் 5:24-ல் "என் வசனத்தைக் கேட்டு, என்னை அனுப்பினவரை விசுவாசிக்கிறவனுக்கு நித்திய ஜீவன் உண்டு, அவன் ஆக்கினைத் தீர்ப்புக்குட்படாமல், மரணத்தை விட்டு நீங்கி ஜீவனுக்குட்பட்டிருக்கிறான்" என்றும், யோவான் 8:51-ல் "ஒருவன் என் வார்த்தையைக் கைக்கொண்டால் அவன் என்றென்றைக்கும் மரணத்தைக் காண்பதில்லை" என்றும், யோவான் 11:25-ல் "நானே உயிர்த்தெழுதலும் ஜீவனுமாயிருக்கிறேன், என்னை விசுவாசிக்கிறவனெவனும் என்றைக்கும் மரியாமலும் இருப்பான்" என்றும் இயேசு சொல்லியிருப்பதை வாசிக்கலாம்.

கிறிஸ்தவ விசுவாசம் ஒருவனை இறப்பினின்று காப்பதில்லை. ஆனால் அவன் இரண்டாம் மரணத்தினால் சேதப்படுவதில்லை என்பதை வேதவாக்குகள் தெளிவுபட கூறுகின்றன (வெளி. 20-ம் அதிகாரம் காண்க). ரோமர் 6:21-23 வரை அப். பவுலும் இதையே குறிப்பிடுகிறார்.

3. மனுக்குலமும் மீட்பும் : இயேசுகிறிதுவின் மரணம் மனுக்குலத்திற்கு முழுமையான மீட்பை வழங்கியது (ரோமர் 6:22). இயேசு ஏன் மரித்தார்? என்னும் கேள்விக்கு அப்போ. பவுல் குறிப்பிடும் பதில்கள்.

1.ரோமர் 5:6 - நாம் பெலனற்றவர்களாயிருக்கும்போதே, குறித்த காலத்தில் கிறிஸ்து அக்கிரமங்களுக்காக மரித்தார்.

2.ரோமர் 5:8 - நாம் பாவிகளாயிருக்கையில் கிறிஸ்து நமக்காக மரித்தினாலே, தேவன் நம்மேல் வைத்த நமது அன்பை விளங்கப் பண்ணுகிறார்.

3.ரோமர் 5:10 - நாம் தேவனுக்கு சத்துருக்களாயிருக்கையில், அவருடைய குமாரனின் மரணத்தினாலே அவருடனே ஒப்புரவாக்கப்பட்டோம்.

யார் இந்த மீட்பை தக்கவைத்துக் கொள்கிறார்கள் என்றால்

1.ரோமர் 6:19,20 - தேவ நீதிக்கு அடிமைகளானவர்கள், இவர்கள் சரீரங்களை அசுத்தத்திற்கும், அக்கிரமத்திற்கும் அடிமையாக்காமல் பரிசுத்தத்தைக் காப்பவர்கள்.

2.ரோமர் 6:22 - தேவனுக்கு அடிமையானவர்கள். மனிதனுக்கு அடிமைகளாயிருக்க விரும்புகிறவர்கள் தேவசித்தத்தைத் தடுமாறச் செய்வார்கள். தேவனுக்கு அடிமைகளாயிருப்பவர்களோ தேவதிட்டத்தை நிறைவேற்றுவார்கள்.

அன்பானவர்களே, மீறுதல் நிறைந்த மனுக்குலத்தின் நடுவிலே, இயேசு கிறிஸ்துவின் இரத்தத்தினால் கிடைத்த விலையேறப்பெற்ற மீட்பை தக்கவைத்துக்கொள்ள பிரயாசப்படுவோம். இயேசுகிறிஸ்துவின் வாழ்வைப் பின்பற்றும் வைராக்கியமான கிறிஸ்தவ வாழ்வு வாழ நம்மை அர்ப்பணிப்போம். இறையாசீர் என்றும் நம்முடன் தங்குவதாக. ஆமென்.

இறைப்பணியில் உங்களுடன்,

அருட்திரு. V. சாமுவேல் ஜெபராஜ்.

# உதவி ஆயரம்மா மடல்

சாந்தகுணமுள்ளவர்களை இரட்சிப்பினால் அலங்கரிக்கின்ற நமது ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் இனிய பெயரில் தூதன் வாசகர்கள் அனைவருக்கும் மனம் நிறைந்த வாழ்த்துக்களும், வணக்கங்களும் உரித்தாகுக.

சிந்தனைக்கு ஒரு சிறுகதை

டேய் ராபர்ட், இந்தக் கணக்கு எனக்குப் புரியலடா, கொஞ்சம் சொல்லிக்கொடேன்... என்று கெஞ்சியபடியே வந்தான் கோபு. போடா, வகுப்பிலே சார் சொல்லிக்கொடுக்கும்போது ஒழுங்கா கவனிச்சா என்னவாம்? என்னால் செல்லித் தரமுடியாது என அலட்சியமாகப் பதில் சொல்லிவிட்டு நடந்து கொண்டே இருந்தான் ராபர்ட். கோபுவுக்கு அதிக ஏமாற்றமாகப் போய்விட்டது.

அப்போது அந்தப் பக்கமாக வந்த குமார், என்னடா கோபு, சோகமா இருக்கிற? கணக்குத் தெரியலயா? இங்கே வா, நான்உனக்குச் சொல்லித் தரேன் என்றான்.
கோபு கணக்குப் புத்தகத்தை நீட்டியதும், குமார் கணக்கைப் படித்துவிட்டு, எப்படிச் செய்வது என கோபுவிடம் விளக்கமாய்ச் சொன்னான். அவனும் கணக்கைச் சரியாகப் போட்டுவிட்டான்.

அடுத்த நாள், ராபர்ட்டைப் பார்த்ததும், போடா போ, நீ சொல்லித் தராவிட்டால் எனக்கு கணக்கு போடமுடியாதுன்னு நினைச்சிட்டியா! நீ இல்லாட்டி இன்னொருத்தன் சொல்லித் தருவாண்டா. முதல் மார்க் எடுக்கிறோம் என்ற பெருமையிலே திமிர் பிடிச்சித் திரியாதே என்றான் கோபு. ராபர்ட்டுக்குகோபம் வந்துவிட்டது.

என்னடா பேசுற என்று அவனை அடிக்கவும் கையை ஓங்கிவிட்டான். ஆமாண்டா நான் முதல் மார்க் எடுக்கிறதுலே எனக்குப் பெருமைதான். உன்னை மாதிரி கோழிமுட்டையா வாங்குறேன். பொறிச்சித் தின்ன... என்றுகோபுவைக் கேலிபண்ணினான் ராபர்ட். அப்படியெல்லாம் கேலி பண்றது தப்புடா என்றான் பக்கத்தில் நின்ற குமார்.

ஆத்திரமடைந்த ராபர்ட், நீ ஏண்டா அவனுக்காகப் பரிந்து பேசுற... என்னமோ பெருசா அவனுக்குக் கணக்குச் சொல்லிக் கொடுத்திட்டானாம். நான் இன்னைக்கு உனக்கு சவால் விடுறேன்டா! இந்த மாதம் யார் கணக்குப் பாடத்தில் நூற்றுக்கு நூறு மார்க் வாங்குறாங்கண்ணு பார்க்கலாம் என்று பெருமையுடன் பேசினான். குமார் அமைதியாக நின்று கொண்டிருந்தான்.

அன்று இரவு... குமார் படிக்க உட்கார்ந்தான். இயேசப்பா என்னுடைய படிப்பை ஆசீர்வதியும். எல்லாப் பாடங்களையும் நான் புரிந்து கொள்ளும்படி எனக்கு உதவி செய்யும் என்று ஜெபித்தான். கணக்குகளைச் செய்ய ஆரம்பித்தான்.

ராபர்ட்டும் தனது வீட்டில் படிப்பதற்கு முன் ஜெபித்தான். அந்த குமார் பையன் எப்படியாவது தோற்றுப் போகணும். நான் நூற்றுக்கு நூறு மார்க் வாங்கி அவனை ஜெயிப்பதற்கு எனக்குத் துணையாக இரும். தான் ஜெயிப்பதை விட குமார் தோற்றுப் போவதிலேயே குறியாக இருந்தான்.

கணக்குப் பரீட்சையும் வந்தது. ராபர்ட் கணக்குகளை மடமடவென்று வேகமாக செய்து கொண்டிருந்தான். குமாரும் கவனமாக கணக்குகளை செய்து கொண்டிருந்தான். ராபர்ட்டுக்கு ஒரே ஒரு கணக்கு மட்டும் புரியவில்லை. எவ்வளவோ முயற்சி செய்தும் முடியவில்லை. பரீட்சை முடிந்தவுடன் வெளியே வந்தான் ராபர்ட். என்னடா ராபர்ட், ஒருமாதிரி இருக்கிற என்று அன்புடன் கேட்டான் குமார்.

ஒன்னுமில்ல குமார். நான் அளவுக்கு மீறி பெருமைப்பட்டுட்டேண்ணு நினைக்கிறேன். என்னால் ஒரு கணக்கை எவ்வளவோ முயற்சி செய்தும் செய்யமுடியல என்றான். ராபர்ட், எந்தக் கணக்குடா? என்று கேட்டான் குமார். ராபர்ட் கணக்கைச் சொன்னபோது, குமார் அவனுக்குப் புரியும்படி விளக்கி, செய்தும் காண்பித்தான். ராபர்ட்டின் தற்பெருமை ஒருசில நொடிகளில் மறைந்து போய்விட்டது.

பிரியமானவர்களே, கடவுளின் முன்னிலையில் நமது நிலையையும் நாம் எண்ணிப் பார்க்கலாம். பெருமை உள்ளவர்களுக்குத் தேவன் எதிர்த்து நிற்கிறார். தாழ்மை உள்ளவர்களுக்கோ கிருபை அளிக்கிறார் (1 பேதுரு 5:5) என்ற வசனத்தை எப்போதும் மனதில் கொள்வோம். யோவான் 13:1-17 வசனங்களையும் சிந்தனைக்குத் துணையாக வாசித்து தியானியுங்கள்.

தீர்மானம் : நான் பெருமையை என்னிலிருந்து அகற்றி மனத்தாழ்மையை அணிந்துகொள்வேன்.

கர்த்தர் உங்களை உணர்த்துவாராக.

உங்களுக்காக ஜெபிக்கும்,
திருமதி. செலின் சாமுவேல்,
உதவி ஆயரம்மா.

## Answers sent by the following children for January 2015

| | | |
|---|---|---|
| 1. Jane Christabel Wesley | 2. Anne Isabel Wesley | 3. Shauna Samson |
| 4. Kashya Sharon Jeyasingh | 5. Maisie Samson | 6. Jabez Jeyasingh |
| 7. Juliana Mary Cornelius | 8. Sanjay Sumesh | 9. Joel Sumesh |
| 10. Aaron Darwin | 11. Alston Samuel Alwyn | 12. Karin Abrena |
| 13. Joshua Ivan Cornelius | 14. Remona Johnson | 15. Carona Allen |

# செயலர் மடல்

சபைமக்கள் அனைவருக்கும் இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் இனிய வாழ்த்துக்கள். நம் புத்தாண்டு ஆராதனை மிகச் சிறப்பாக அமைந்தது. சபைமக்கள் அனைவரும் உற்சாகமாகக் கலந்துகொண்டு ஆயர் சந்திப்பையும் சிறப்பித்து ஆசீர்வாதம் பெற்றுக்கொண்டனர்.

நமது Junior Church 09-01-2015 முதல் ஆரம்பமானது. 16-01-2015 அன்று Junior Church Anniversary-யுடன் பிள்ளைகளுக்கு பரிசுகளும் வழங்கப் பட்டது. பரிசு பெற்ற பிள்ளைகளுக்கு வாழ்த்துக்கள். சிறப்பாக Junior Church நடத்தும் Superintendent Mrs.Rachel Manuel மற்றும் ஆசிரியர்களுக்கும் சபையின் சார்பாக நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

23-01-2015 அன்று நமது வருடாந்திர சுற்றுலா Ras Al Khaimah-வில் சிறப்பாக நடைபெற்றது. சுமார் 500-க்கும் மேற்பட்டவர்கள் கலந்துகொண்டு, அனைத்துப் போட்டிகளிலும் தங்களை ஈடுபடுத்திக் கொண்டு உற்சாகமாய் ஐக்கியத்தில் கலந்துகொண்டார்கள். அனைத்து ஏற்பாடுகளையும் சிறப்புடன் செய்த Ras Al Khaimah சபைக்குழு உறுப்பினர் Mr.G.Daniel அவர்களுக்கும், சபை மக்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

கடந்த மாத தூதனில் ஏற்கனவே எழுதியபடி நமது Bank Account-ல் காணிக்கைகள் deposit செய்யப்பட்டு வருகின்றன. அனைத்து காணிக்கைகளும், காசோலைகளும் மிக விரைவில் deposit செய்து முடிக்கப்படும். இனிமேல் bank approve செய்யும் அனைத்து transaction-களும் நம் வங்கிக் கணக்கு மூலம் route செய்யப்படும்.

நம் சபைக்குழுவில் எடுக்கப்பட்ட சில தீர்மானங்கள்:

1. Women Fellowship retreat 13-03-2015 அன்று நடைபெறும்.
2. Holyweek special speaker ஆக Rev.Bright Solomon அவர்கள் தேவசெய்தி கொடுப்பார்கள்.
3. VBS 2015 Director ஆக திருமதி.ஷீபா பிரபாகர் அவர்கள் தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளார்கள்.

17-04-2015 அன்று நமது சபையின் சார்பாக Blood Donation campaign ஆலய service முடிந்தவுடன் Al wasal hospital-ல் நடைபெறும்.

சிங் ரெத்னம், செயலர்.

## திருமறைப் பாட ஒழுங்குகள் - பிப்ரவரி 2015

| நாள் | தியானப் பொருள் | பழைய ஏற்பாடு | நிருப வாக்கியம் | நற்செய்தி பகுதி | சங்கீதம் |
|---|---|---|---|---|---|
| 06-02-2015 | படைப்பின் வீழ்ச்சி நிலை | ஆதியா. 3:1-10 | ரோமர் 3:21-26 | மத்தேயு 18:23-35 | 53 |
| 13-02-2015 | தபசு ஓர் ஒப்புரவின் காலம் | ஆதியா. 45:1-15 | எபேசியர் 2:11-22 | யோவான் 2:1-11 | 85 |
| 18-02-2015 | சாம்பல் புதன் | யோவேல் 2:12-20 | கலாத்தியர் 2:15-21 | லூக்கா 9:23-27 | 32 |
| 20-02-2015 | தீட்டானவரைத் தொடுதல் | 2 இராஜா. 5:1-10 | எபிரெயர் 13:8-17 | மத்தேயு 8:1-4 | 10:1-12 |
| 27-02-2015 | வாழ்வைக் காக்கும் நம்பிக்கை | 2 இராஜா. 4:1-7 | அப்போ. 5:12-16 | லூக்கா 5:17-26 | 72 |

## வாழ்த்துகிறோம்

**"இது கர்த்தரால் ஆயிற்று, நாங்கள் மகிழ்ந்திருக்கிறோம்"**

கர்த்தருடைய கிருபையால் நவம்பர் மாதம் 20-ம் தேதி
பரிசுத்த மெய் விவாகத்தின் மூலம் குடும்பமாக இணைக்கப்பட்டுள்ள
Mr.G.Sivakumar & Mrs.C.P.Vinitha
கர்த்தருடைய கிருபையால் நவம்பர் மாதம் 27-ம் தேதி
பரிசுத்த மெய் விவாகத்தின் மூலம் குடும்பமாக இணைக்கப்பட்டுள்ள
Mr.P.Ruban Thana Singh & Mrs. D.Jebasundari Newlin
கர்த்தருடைய கிருபையால் டிசம்பர் மாதம் 29-ம் தேதி
பரிசுத்த மெய் விவாகத்தின் மூலம் குடும்பமாக இணைக்கப்பட்டுள்ள
Mr.P.Santhosh & Mrs. S.J.Joncy
கர்த்தருடைய கிருபையால் டிசம்பர் மாதம் 29-ம் தேதி
பரிசுத்த மெய் விவாகத்தின் மூலம் குடும்பமாக இணைக்கப்பட்டுள்ள
Mr.G.Sahayam & Mrs. Mary Selin
கர்த்தருடைய கிருபையால் ஜனவரி மாதம் 3-ம் தேதி
பரிசுத்த மெய் விவாகத்தின் மூலம் குடும்பமாக இணைக்கப்பட்டுள்ள
Mrs.Monisha & Mr. Abhipray
இவர்களை திருச்சபையாக வாழ்த்துகிறோம்.

# பயனுள்ள உபவாசம்

அண்டையில்லை தாண்டியில்லை
அண்டந்தாண்டும் வேகமாகும்
பண்டமில்லை கண்டதில்லை
கேட்டதெல்லாம் கொண்டுவரும்

சிறிதில்லை பெரிதில்லை
உருவில்லை ஒருசாதனம்
பெரியோரில்லை சிறியோரில்லை
பிரிவில்லை யாவருக்கும்

நீளமில்லை ஆழமில்லை
வாழ்வளிக்கும் நீள்ஆயுதம்
உள்ளில்லை வெளியில்லை
உள்ளத்தில் உபவாசம்

பண்டுதொட்டு இன்றுவரை
அண்டிவென்று மீண்டதாகும்
எண்ணஅலை விண்ணியக்க
மண்ணில்வேறு கண்டதில்லை

சோதனைகளை சாதனைகளாக்க
வேதனைகளை களையெடுக்க
ஏசுதாமே எடுத்தமுதல்
ஆயுதமாகும் உபவாசம் !

விளம்பரமாய் உபவாசம்
களம்பெறவே அவகாசம்
நலந்தராத நாடகமாம்
விளைவழிக்கும் களைகளாகும்

கண்காணச் செய்திடாமல்
உணர்வாலே ஒன்றுவதால்
அந்தரங்கப் பிதாகரத்தால்
வெளியரங்கப் பலன்தருவார் !

ஆதாரம் : மத்தேயு 6:16-17.
கவிதை எண் : 173.
ஆக்கம் : மணிமுத்து.

# நீங்கள் கிறிஸ்தவரா...

"கர்த்தருக்குக் காத்திருக்கிறவர்களோ புதுப்பெலன் அடைந்து, கழுகுகளைப்போலச் செட்டைகளை அடித்து எழும்புவார்கள், அவர்கள் ஓடினாலும் இளைப்படையார்கள், நடந்தாலும் சோர்ந்துபோகார்கள்." ஏசாயா 40:31.

சென்ற மாத தொடர்ச்சி
உலகில்
உதயமானவர்
அவர், இவர்
என்றில்லாது
எவர் ஒருவர் - நம்
தந்தையாம்
தயாபரர் கர்த்தரை
சதாகாலமும்
இதோ எந்தன்
இறைவனென...
பாசிபடியாத
பரிசுத்த மனதுடன்
ஓப்புக் கொடுத்து
சரணடைந்து
பிரார்த்திக்கவும்
ஆராதிக்கவும்
தியானிக்கவும்
ஜெபிக்கவும்
செய்பவருக்கு
வாழ்வின்
பயம் தீரும்
ஜெயம் வரும்
இல்லாதவர்க்கு
இனிதாக
கொடுக்கப்படும்
இருப்பவர்க்கு-அது
இழக்காமல்
பாதுகாக்கப்படும்.
நலம் வந்து
நாளெல்லாம்
தென்றலாய்
தாலாட்டும்.

நோய் நொடியின்றி
பலம் வந்து
சீராட்டும்... இவை
நிதர்சமான
உண்மையென
உணர்க
கர்த்தரின்
கிருபை பெறுக.
இன்னும் ஒரு தரம்
பெருமைக்குரிய
பெரும் வியாதி
தீர்க்கும்
பெதஸ்தா
குளம் அருகே
வலம் வருவோம்.
உடலில்
ஊனம்
உள்ளத்தில்
தியானம்
துயர்நீக்கி
துன்பம் போக்கி
ஆற்றுவாரோ
தேற்றுவாரோ யார்...?
குளத்துக்குள்
தூக்கிவிடுவார் யார்...?
எண்ணி எண்ணி
ஏங்கி
மனதில் சுமையை
தாங்கி... ஒரு
வியாதியஸ்தன்
காலம் கனியுமென
கடவுளின்
கருணைக்காக

காத்திருந்த
காலம்
ஒன்றல்ல
இரண்டல்ல
முப்பத்தெட்டு
வருடம்
இயேசு - அந்த
வியாதியஸ்தனை
கண்டு வெகுகாலம்
காத்திருப்பது அறிந்து
அவனை நோக்கி
எழுந்திரு உன்
படுக்கையை
எடுத்துக்கொண்டு
நட என்றார்.
அக்கணமே
அந்த மனுஷன்
சொஸ்தமானான்.
நாளும்
அற்புதம் நடத்தும்
அற்புதத்தின் அற்புதர்
ஆண்டவர்
இயேசுவுக்கு
ஒரு சொல் போதும்
எந்த கொடிய
நோயும்
நொடிப்பொழுதில்
ஓடிப்போகும்.
நலம் நாடிவரும்
நல்வாழ்வு கூடிவரும்.
இயேசுவின் வருகை
அருகாமை வருகிறது
நாமும்
காத்திருப்போம்.

என்றும் அன்புடன், T. ராஜ்குமார். Mens Fellowship.

# தேவாலயம்

கிறிஸ்துவுக்குள் மிகவும் பிரியமானவர்களே!

வானம் எனக்கு சிங்காசனம், பூமி எனக்குப் பாதபடி என்று விளம்பின தேவன், மனிதன் தன் கையினால் கட்டின ஆலயத்தில் வாசமாயிருப்பாரோ? ஆம். அவர் நம்மீது பிரியமாய் இருக்கிறபடியினால் நம் கரங்களால் உருவாக்கின ஆலயத்தைப் பரிசுத்தப்படுத்தி, என் கண்களும், என் இருதயமும் எந்நாளும் அங்கே இருக்கும் என்று வாக்குப் பண்ணினார். ஆனால் தேவன் பிரத்தியட்சமாய் வெளிப்படும் ஆலயமாகிய தேவாலயத்தைப் பற்றிய வாஞ்சை நமக்குள் எப்படியிருக்கிறது? அவர் சமூகம் நாடின தம் பிள்ளைகளை அவர் ஒருபோதும் வெறுமையாய் அனுப்புவது இல்லை.

அவர் சமூகத்தை நாடும் பிள்ளைகள் தேவாலயத்தில் இருந்து எதைப் பெற்றுக் கொள்கிறார்கள்?

1.நீடித்த வாழ்வு - என் ஜீவனுள்ள நாளெல்லாம் நன்மையும் கிருபையும் என்னைத் தொடரும். நான் கர்த்தருடைய வீட்டிலே நீடித்த நாட்களாய் நிலைத்திருப்பேன். சங். 23:6.

2.பாதுகாப்பு - தீங்கு நாளில் அவர் என்னைத் தம்முடைய கூடாரத்தில் மறைத்து, என்னைத் தமது கூடார மறைவிலே ஒளித்து வைத்து, என்னைக் கன்மலையின் மேல் உயர்த்துவார். சங். 27:5.

3.பாக்கியம்

அ) உம்முடைய பிரகாரங்களில் வாசமாயிருக்கும்படி நீர் தெரிந்து கொண்டு சேர்த்துக்கொள்ளுகிறவன் பாக்கியவான். சங். 65:4.

ஆ) உம்முடைய வீட்டில் வாசமாயிருக்கிறவர்கள் பாக்கியவான்கள். அவர்கள் எப்பொழுதும் உம்மைத் துதித்துக்கொண்டிருப்பார்கள். சங். 84:4

4.செழுமை

அ) கர்த்தருடைய ஆலயத்தில் நாட்டப்பட்டவர்கள் எங்கள் தேவனுடைய பிரகாரங்களில் செழித்திருப்பார்கள். சங். 92:13

ஆ) நானோ தேவனுடைய ஆலயத்தில் பச்சையான ஒலிவ மரத்தைப் போலிருக்கிறேன். சங். 52:8.

5.திருப்தி - உம்முடைய பரிசுத்த ஆலயமாகிய உமது வீட்டின் நன்மையால் திருப்தியாவோம். சங். 65:4

6.அடைக்கலம் - உம்முடைய பீடங்களண்டையில் அடைக்கலான் குருவிக்கு வீடும் தகைவிலான் குருவிக்குத் தன் குஞ்சுகளை வைக்கும் கூடும் கிடைத்ததே. சங்.84:3

7.பரிபூரண ஆனந்தம் - உம்முடைய சமூகத்தில் பரிபூரண ஆனந்தமும் உம்முடைய வலது பாரிசத்தில் நித்திய பேரின்பமும் உண்டு. சங். 16:11

8.முதுமையில் செழுமை - அவர்கள் முதிர்வயதிலும் கனிதந்து, புஷ்டியும், பசுமையுமாய் இருப்பார்கள். சங். 92:13,15.

9.ஆசீர்வாதம் - வானத்தையும், பூமியையும் உண்டாக்கின கர்த்தர் சீயோனிலிருந்து உன்னை ஆசீர்வதிப்பாராக. சங். 134:3

10.பரிசு - ஜெயங்கொள்ளுகிறவனெவனோ அவனை என் தேவனுடைய ஆலயத்திலே தூணாக்குவேன். வெளி. 3:12

பிரியமானவர்களே! நாம் வாழும் இந்தக் கடைசி நாட்களில் பாவிகளாகிய நம்மையும் தெரிந்துகொண்டு அவர் வாழும் ஆலயமாக மாற்றியிருக்கிறார். “நீங்கள் தேவனுடைய ஆலயமாயிருக்கிறீர்களென்றும், தேவனுடைய ஆவி உங்களில் வாசமாயிருக்கிறாரென்றும் அறியீர்களா?” 1 கொரி. 3:16. அன்று இஸ்ரவேல் மக்களுக்குள் உலாவி அவர்கள் தேவனாயிருந்தவர் இன்று மகிமையின் நம்பிக்கையாய் நமக்குள் வாசம் செய்கிறார். ஆகையால் அந்த ஆலயத்தைக் கறைதிரையின்றிப் பாதுகாப்போம். தேவாலயத்தை வாஞ்சையோடு நாடுவோம்.

புனிதா தாஸ்

## வருந்துகிறோம்

"கிறிஸ்து எனக்கு ஜீவன், சாவு எனக்கு ஆதாயம்"

நமது சபையின் முன்னாள் அங்கத்தினர்
Mr.R.Reginald அவர்களின் துணைவியார்
Mrs.Helen Manohara Joy அவர்கள் 30-12-2014 அன்றும்
நமது சபையைச் சேர்ந்த
Mr.Hani Babu Vincent அவர்களின் தாயார்
Mrs.Lilly Vincent அவர்கள் 04-01-2015 அன்றும்
Mrs.Sheela Bright அவர்களின் தகப்பனார்
Mr.Gnanadhas அவர்கள் 10-01-2015 அன்றும்
Mr.Cyril P.Doss அவர்களின் தகப்பனார்
Mr.Devia Sigamani அவர்கள் 10-01-2015 அன்றும்
Mr.Stephen அவர்களின் தாயார்
Mrs.Kanakabai James அவர்கள் 24-01-2015 அன்றும்
கர்த்தருக்குள் நித்திரை அடைந்துள்ளார்கள்.

"...என் ராஜாவே, என் தேவனே, என் வேண்டுதலின் சத்தத்தைக் கேட்டருளும்."
சங்கீதம் 5:2

கிறிஸ்துவுக்குள் பிரியமானவர்களே, "திருச்சபை ஜெபநாளில்" பங்கு பெற்றுத் தொடர்ந்து ஜெபித்துவரும் ஒவ்வொரு குடும்ப அங்கத்தினர்களுக்கும், சபையின் சார்பில் நன்றி கூறுகின்றோம். தொடர்ந்து மாதத்தின் முதல் ஞாயிறு தோறும், ஜெபக் குழுக்களிலும், மற்றும் தினந்தோறும் ஜெப நேரம் ஒதுக்கி, ஜெபித்துத் திருச்சபைத் திருப்பணிகளைத் தாங்குங்கள். தேவ ஆசீர்வாதம் உங்களோடிருப்பதாக.

## துதிகள்

- இம்மட்டும் நம்மைப் பாதுகாத்து, பராமரித்து இப்புதிய மாதத்தைக் காணச்செய்த தேவனுக்கு நன்றி ஏறெடுப்போம். கர்த்தர் நமக்குத் தந்தருளிய சரீர சுகம், பெலம், ஜீவனுக்காக அவரைத் துதிப்போம்.
- திருச்சபை மூலமாக நாம் இம்மட்டும் பெற்றுக்கொண்ட ஐக்கியம் மற்றும் ஆன்மீக நன்மைகளுக்காக நன்றி கூறுவோம்.
- தேவன் நம் ஜெபத்தைக் கேட்டு நம் மத்தியில் பிரசன்னராயிருந்து, நம்மைத் தாங்கி பெலப்படுத்தியமைக்காக ஸ்தோத்திரம் கூறுவோம்.
- Junior Church Anniversary, நமது சபை இன்பச்சுற்றுலா யாவும் சிறப்பாகவும், கர்த்தருடைய கிருபையால் ஆசீர்வாதமாகவும் நடைபெற கர்த்தர் பாராட்டின தயவுகளுக்காக அவரைத் துதிப்போம்.

## திருச்சபை திருப்பணிகளுக்கான ஜெப வேண்டுதல்கள்

- நம் குருவானவர்கள், சபை ஊழியர், மற்றும் அவர்களுடைய குடும்பத்தினருக்காக, திருப்பணிகளுக்காக,
- நம் திருச்சபையின் முன்னாள் குருவானவர்கள், அவர்கள் குடும்பத்தாருக்காகவும், ஆரோக்கியத்திற்காகவும்,
- நம் திருச்சபைகளைச் சேர்ந்த திருச்சபையினர் அனைவருக்காகவும், ஆங்காங்கே நடைபெறும் ஆராதனைகள், ஊழியங்கள், சிறுவர், வாலிபர், ஆண்கள், பெண்கள் மத்தியில் நடைபெறும் சிறப்பு ஊழியங்கள் மற்றும் முகாம் ஊழியங்களுக்காக,
- திருச்சபை மக்களுடைய நல்லுறவு பெலப்பட ஏதுவான நம் ஆன்மீக வளர்ச்சிக்காக,
- திருச்சபையின் நிர்வாகக்குழு அங்கத்தினர்களுக்காகவும், தேவ சித்தம் நிறைவேற்றும் வகையில் அவர் தம் பணிகளுக்காகவும்,
- திருச்சபைப் பணிகளை ஜெபத்தோடு உற்சாகமாகவும், உதாரத்துவமாகவும் தாங்கி வரும் திருச்சபை மக்களுக்காக,
- சிறுவர் வேதபாடசாலைத் திருப்பணிகளில் அர்ப்பணிப்போடு பங்கு பெறும் தேவபிள்ளைகளுக்காக, பயன்பெறும் நம் குழந்தைகளின் இறைபக்திக்காக,
- நமது திருச்சபையின் ஜெபக்குழுக்களுக்காக, ஐக்கிய, ஆன்மீக வளர்ச்சிக்காக,

- மிஷனரி ஊழியங்களுக்காக, தாங்கும் திருச்சபை மக்களுக்காக, மற்றும் மிஷனரி ஸ்தாபனங்களுக்காக
- தென்னிந்தியத் திருச்சபைக்காக, அனைத்துப் பேராயங்கள், நமது பேராயர்கள், குருவானவர்கள், திருப்பணியாளர் அனைவருக்காகவும், திருப்பணிகளுக்காக
- கொளகூர் மாதிரி கிராமத்தில் அமைத்துள்ள மருத்துவமனைக்கு அர்ப்பணமுள்ள செவிலியர் கிடைக்க ஜெபிப்போம்.

## நாட்டுக்காக ஜெப வேண்டுதல்கள்

- இந்திய நாட்டுக்காக, நாட்டின் தலைவர்கள் மற்றும் அதிகாரம் வகிப்போர் அனைவருக்காகவும், தேசத்தின் வளத்துக்காகவும், வளர்ச்சிக்காகவும், மனிதநேயமும், மத நல்லிணக்கமும் பெருகவும் ஜெபிப்போம். நல்ல இயற்கைச் சூழ்நிலைகள், மழை வளத்துக்காக ஜெபிப்போம்.
- அரபு ஐக்கியக் குடியரசுக்காக, அதன் தலைவர்களுக்காக, இங்கு வாழும் அனைத்துமக்களின் சமாதானத்துக்காக,
- உலகத் தலைவர்களுக்காக, சமாதானத்துக்காக, உலகில் தேவ ஆளுகைக்காக
- சுற்றியுள்ள நாடுகளில் வாழும் மக்கள் அமைதியோடும் சமாதானத்தோடும் வாழ கர்த்தர் கிருபை செய்ய வேண்டிக்கொள்வோம்.

## நமது ஜெப மன்றாட்டுகள்

- இந்த மாதத்தில் தேவ வழிநடத்துதல்கள், தேவ ஆசீர்வாதங்களுக்காக, பாதுகாப்பு, பராமரிப்பு, சுகம், பெலம் ஆகிய தேவ கிருபைக்காக,
- நமது குடும்பங்களின் தேவைகளுக்காக, நமது பிள்ளைகளின் கல்விமுன்னேற்றம், மற்றும் ஆன்மீக வளர்ச்சிக்காக, வளமிகு எதிர் காலத்துக்காக,
- வேலை வாய்ப்புக்காய் காத்திருப்போருக்காக, விசா பிரச்சனைகளில் இருப்போருக்காக, சரீர சுகவீனங்களில் சிகிச்சை பெறுவோருக்காக,
- திருமணத்திற்காக தெய்வ வழிநடத்துதல் நாடுவோருக்காக, குழந்தை பாக்கியத் திற்காக ஜெபிப்போர், மற்றும் பிரசவ கால கட்டத்தில் இருப்போர் அனைவருக்கும் தேவ ஒத்தாசை, கிருபைக்காக,
- நம் வாழ்வின் அனைத்து சூழ்நிலைகளிலும் தேவ ஆளுகை, வல்லமைக்காக, வழிநடத்துதல்களுக்காக
- பொருளாதார நெருக்கடியினால் வேலையில் ஏற்பட்டுள்ள பிரச்சனைகள் நீங்கவும், பாதிக்கப்பட்ட ஒவ்வொருவருடைய தேவைகள் சந்திக்கப்படவும்
- குடும்பங்களில், வேலையிடங்களில் மன அழுத்தத்தோடு வாழும் மக்கள் நல்வாழ்வு பெற
- நடைபெறவுள்ள V.B.S. ஆயத்தங்களுக்காகவும் சிறப்பாக நடந்தேறவும் ஜெபிப்போம்.

"தேவனே, நான் உம்மை நோக்கிக் கெஞ்சுகிறேன்... என்னிடத்தில் உம்முடைய செவியைச் சாய்த்து, என் வார்த்தையைக் கேட்டருளும்." சங்கீதம் 17:6.

நமக்கென ஓர் ஆலயம் கட்டுவதற்கான இடவசதியும், பொருளாதார தேவைகளும் சந்திக்கப்பட சபையார் தங்கள் தனி ஜெபங்களிலும், குடும்ப ஜெபங்களிலும் ஊக்கமாக தொடர்ந்து ஜெபிக்க அன்புடன் கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள்.

## மிஷனெரிகள் பகுதி 26

"அறுப்பு மிகுதி, வேலையாட்களோ கொஞ்சம்" மத்தேயு 6:37

## திரு. H.A. கிருஷ்ணப்பிள்ளை



திரு.H.A.கிருஷ்ணப்பிள்ளை அவர்கள் 1827-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 23-ம் நாள் திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள ரெட்டியார் பெட்டி என்னும் இடத்தில் பக்தி வைராக்கியம் கொண்ட ஒரு இந்து வைணவ குடும்பத்தில் பிறந்தார். இவரது தந்தை சிறந்த தமிழ் பண்டிதர். இதனால் சிறுவயதிலேயே வைணவ நூல்கள் அனைத்தையும் மனப்பாடமாகக் கற்றுத் தேறினார். வைணவ சமயத்தின் தீவிர பக்தனாய் மாறினார். சமயத்தின் மீது கொண்ட நாட்டத்தின் மூலமாக கிருஷ்ணப்பிள்ளைக்கு தமிழ் மீது அதிக நாட்டம் உண்டானது. இலக்கண சாஸ்திரங்கள் அனைத்தையும் எளிதாய் கற்றுத் தமிழ் பண்டிதரானார்.

1853-ம் ஆண்டு சாயர்புரத்தில் அமைந்த Society for propagation of the Gospel என்ற அமைப்பில் உள்ள வேதாகமக் கல்லூரியில் தமிழ் ஆசிரியர் தேவைப்பட்டதால் அங்கு தமிழ் ஆசிரியராக பேராயர் ராபர்ட் கால்டுவெல் மூலம் பணி அமர்த்தப்பட்டார். தன்னுடைய பணியை மட்டும் செய்து வந்த கிருஷ்ணப்பிள்ளை கிறிஸ்தவர்களிடம் தொடர்பு வைத்துக்கொள்ள விரும்பவில்லை.

ஒருநாள் ஹக்ஸ்டபிள் என்ற மிஷனெரி ஒரு புதிய ஏற்பாட்டை கிருஷ்ணப்பிள்ளைக்குக் கொடுத்தார். இதை விரும்பாதவர் தன்னுடைய வேலையை விட்டுவிட்டார். ஆனாலும் அந்த மிஷனெரியின் அன்பு அவரைச் சிந்திக்க வைத்தது. அந்நாட்களில் அனேக உயர்குல வாலிபர்கள் கிறிஸ்துவுக்காக தங்கள் இருதயத்தைத் திறந்து கொடுத்தனர். அவர்களில் தனக்கோடி ராஜு என்பவரும் ஒருவர். அவர் கிருஷ்ணப்பிள்ளைக்கு கிறிஸ்துவின் அன்பை தெள்ளத்தெளிவாக எடுத்துக்கூறினார்.

அன்று இரவு கிருஷ்ணப்பிள்ளை அவர்களால் தூங்கமுடியவில்லை. கிறிஸ்துவைக் குறித்த சிந்தனைகள் உள்ளத்தில் நிறைய ஆரம்பித்தது. இதயம் மெல்லத் திறந்தது. கிறிஸ்துவை தன் உள்ளத்தில் வரவழைத்தார். அவர் அடைந்த ஆனந்தத்திற்கு அளவே இல்லை.

1875-ம் ஆண்டு மைலாப்பூர் St.தாமஸ் ஆலயத்தில் அருள்திரு.ஹென்றி ஆல்ப்ரட் ஆயர் அவர்கள் கிருஷ்ணப்பிள்ளைக்கு திருமுழுக்கு கொடுத்து அவரை கிறிஸ்துவின் மந்தையில் சேர்த்தார். தமக்கு திருமுழுக்கு கொடுத்த ஆயரின் பெயரின் முதல் எழுத்தைத் தன்னுடைய பெயரின் முன் வைத்து H.A. கிருஷ்ணப்பிள்ளை ஆனார். பின்னர் தமிழ் பண்டிதராக Church Mission Society (CMS)-ல் பணி அமர்த்தப்பட்டார்.

தமிழ் பண்டிதரான கிருஷ்ணப்பிள்ளை கிறிஸ்துவைப் புகழ்ந்து பாடல்கள் எழுதவும், பாடவும் ஆரம்பித்தார். இரட்சண்ய யாத்ரீகம், இரட்சண்ய மனோகரம் என்ற அரிய நுல்களை எழுதினார். மாபெரும் மிஷனெரிகளான சர்ஜென்ட் உவாக்கர், ஏமி கார்மைக்கேல் மற்றும் பலருக்கு தமிழ் கற்றுக் கொடுத்தார்.


அனேக தமிழ் புத்தகங்கள், பாடல்கள் மூலமாக பலரையும் கிறிஸ்துவுடன் இணைத்தார். இதன் மூலமாக இவருக்கு கிறிஸ்தவக் கம்பர் என்ற பட்டம் கிடைத்தது.

ஆண்டவர் என் இருதயத்தைத் திறந்தார். அவரைத் துதிக்க என் வாயைத் திறந்தேன் என்ற கிருஷ்ணப்பிள்ளை 1900-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 3-ம் நாள் இறைவனைப் புகழ்ந்து பாட விண்ணகம் சென்றார். இவருடைய பாடல்கள் நமது ஆலய கீர்த்தனைப் புத்தகத்திலும் உள்ளது. அவையாவன

சத்தாய் நிஷ்களமாய்
கள்ளமுறுங் கடையேனுங் கடைத்தேறப் பெருங்கருணை
பக்தியாய்ச் செபம் பண்ணவே
ஜென்மமார் கருவிலே வினைவிடம் தீண்டலாய்
மன்னுயிர்த் தொகுதியிடேற வானிலும்

தொடரும்...

R.ஜெபர்சன்.




## சாம்பல் புதன்கிழமை ஆராதனை

**18-02-2015 அன்று**
**இரவு 8:30 மணிக்கு**
**ஆலய வளாகத்தில்**

வைத்து நடைபெறும்.

# ஆராதனை பாடல்கள் - பிப்ரவரி 2015

## பாமாலை - கீர்த்தனை

**06-02-2015**

| | | |
|---|---|---|
| பாமாலை | 15 | போற்றிடு ஆன்மமே |
| பாமாலை | 199 | இயேசுவை நம்பி |
| கீர்த்தனை | 95 | நீயுனக்குச் சொந்தமல்லவே |
| கீர்த்தனை | 141 | கிருபை புரிந்தனையாள் |
| பாமாலை | 175 | கர்த்தரின் மாம்சம் |

**13-02-2015**

| | | |
|---|---|---|
| பாமாலை | 34 | பிதாவே மா தயாபரா |
| கீர்த்தனை | 102 | இரங்கும் இரங்கும் |
| பாமாலை | 202 | நான் உம்மைப்பற்றி |
| கீர்த்தனை | 175 | பயந்து கர்த்தரின் |
| கீர்த்தனை | 176 | ஆத்தும ஆதாயம் |
| கீர்த்தனை | 166 | ஆண்டவரின் நாமமதை |

**18-02-2015 (சாம்பற் புதன்)**

| | | |
|---|---|---|
| பாமாலை | 65 | நாற்பது நாள் ராப் பகல் |
| பாமாலை | 63 | இந்த அருள் காலத்தில் |
| கீர்த்தனை | 111 | பாவியாம் எனை மேவிப்பார் |
| கீர்த்தனை | 110 | பாவியாகவே வாரேன் |

**20-02-2015**

| | | |
|---|---|---|
| பாமாலை | 3 | ஆ கர்த்தாவே தாழ்மையாக |
| பாமாலை | 118 | நீரோடையை மான் வாஞ்சித்து |
| கீர்த்தனை | 105 | ஐயையா நான் வந்தேன் |
| கீர்த்தனை | 124 | துங்கனில் ஒதுங்குவோன் |
| கீர்த்தனை | 126 | நம்பி வந்தேன் மேசையா |

**27-02-2015**

| | | |
|---|---|---|
| பாமாலை | 33 | தூய தூய தூயா |
| பாமாலை | 132 | பாவ சஞ்சலத்தை நீக்க |
| பாமாலை | 109 | பாதை காட்டும் |
| கீர்த்தனை | 138 | என் உள்ளங் கவரும் |
| கீர்த்தனை | 121 | விசுவாசியின் காதில் |
| கீர்த்தனை | 119 | கிஞ்சிதமும் நெஞ்சே |

## Interesting facts about SARAH



The woman who became mother of nations

Meaning of Sarai : Princely
Meaning of Sarah : Princess
Father Name : Terah
Sarah is half sister to Abraham
Married in ur of the chaldees,
then moved with him to Canaan.
Half Brothers : Nahor and Haran
Nephew : Lot
Son : Issac

The Testimony of the bible is that Sarah was unusually beautiful (Gen:12:11,14) when she was 90 years of age she was so lovely that Abraham feared that kings would fall in love with her beauty, Sarah is the only woman whose specific age is stated is scripture, others will be given us approximate age stating as "about".

Her weakness is had trouble believing God's promise to her. Tried to cover her faults by blaming others. Attempted to work problems out on her own without consulting God.

Isaac was the miracle child born to Sarah and Abraham when Sarah was 90 years old and Abraham was 100
Sarah died at 127 years in Hebron.
Buried in the Cave of Machpelah near Mamre (which is at Hebron)
First woman listed in the Hall of Faith is Hebrews11.

Priya singh.



Hi, Children of our church,
**Draw and write slogans about Blood Donation.**
Best ones will be published in
March and April Thoothan issues.
Age no bar!



# FAMILY DEVOTION



## 3 Essentials for a Christian Home

"United we stand; Divided we fall" says an old adage. "A house divided against itself will fall - Mark 3:25", warned our Lord Jesus Christ. Homes have become war zones today as there is a never ending battle for establishing individuality. As long as spouses are battling to establish their individual rights and will, the kingdom of God can never rule the home. Why peace and harmony is such a rare thing in a modern Christian home? Let us examine ourselves now, in the light of Abraham's family to accomplish God's purpose in one accord. The most essential kingdom principle for establishing harmony at home is to cultivate a "we" attitude and say no to "I or me" attitude. Col: 3: 18-20 reads thus *"Wives, submit to your husbands, as is fitting in the Lord. Husbands, love your wives and do not be harsh with them. Children, obey your parents in everything, for this pleases the Lord."* According to the Kingdom principle stated above, each member of the family seeks to serve the other member in their family in order to flow together.

***1 Wives, submit to your husbands, as is fitting in the Lord.***

When Abraham was called for a specific purpose, Sarah did not impose her self-will. She just followed her husband's lead even though they never knew where they were travelling to. It's really inspiring to know that there were no delays or regrets or hesitation or arguments, or petty fights or grumbling by Sarah on their long voyage...... Sarah was a great travel companion for Abraham, who wandered from one place to another. Everything was not right or easy, even Sarah faced hardships such as famine, she risked herself to stand before Pharaoh and Abimelech as Abraham's sister, endured disappointments as a childless woman in the wilderness, yet she never discontinued her journey or looked back to her father's house for any consolation. That's the way she totally submitted

herself to Abraham as fitting to the Lord. Thus God blessed her as the mother of nations. These days we find many young women who have partially submitted themselves to their husband as they are still under the stronghold of their career or parents. Are you juggling between two masters? Then, it is time to realize that no one can serve two masters. You will only breed contempt at home and never bring harmony.

***2 Husbands, love your wives and do not be harsh with them***

A woman's submission is not one sided but it's a reciprocal relationship. The husband reciprocates her submission through his genuine and faithful love. Indeed, it is an expression of God's love for mankind. A husband who has experienced God's love in depth will definitely be able to shower the same on his beloved wife. Eph: 5: 28 says, "Husbands, ought to love their wives as their own bodies. He who loves his wife loves himself." Abraham was never harsh with Sarah for being childless. Homes will certainly be transformed into a paradise if husbands stop being harsh to their wives despite their shortcomings. Is your cup overflowing with love or is it an empty cup making the most noise or is it filled to the brim with anger and bitterness about your wife's past mistakes. All you need is an intimate relationship with God like our forefather Abraham.

***3 Children, obey your parents in everything, for this pleases the Lord***

While most parents are contemplating whether to cultivate independence of thought or obedience in their child, the Bible emphasizes, it is a pleasing sight before God when children obey their parents. Devoted Christian parents should never be deviated to modern school of thought that contradicts Biblical values. As a young boy, Isaac obeyed his father Abraham all the way to Mount Moriah to be offered as a sacrifice to God. Children must obey parents in order to accomplish God's will and purpose in their lives.

"God, give us Christian homes
Homes where the children are
Led to know Christ in His beauty.......,
Homes where the altar fires burn and glow
God give us Christian homes."

# வேதவினா போட்டி - பிப்ரவரி 2015

## பெரியோர்களுக்கான வேதவினா போட்டி

### (பிரசங்கி - உன்னதப்பாட்டு)

கீழ்கண்ட வினாக்களுக்கு பிரசங்கி - உன்னதப்பாட்டு பகுதியிலிருந்து விடைகளை எழுதி 20-ம் தேதிக்குள் போதகருக்கு அனுப்பினால், அனைத்து வினாக்களுக்கும் சரியான விடை எழுதுபவர்களின் பெயர் தூதன் புத்தகத்தில் வெளியிடப்படும்.

1. நற்கீர்த்தி எதைக் காட்டிலும் சிறந்தது?
2. எதைச் செலுத்தத் தாமதிக்கக்கூடாது?
3. தேவனுடைய பார்வையில் நல்லவனாயிருப்பவன் பெற்றுக் கொள்ளும் நன்மைகள் யாவை?
4. உன்னதப்பாட்டு புஸ்தகத்தில் “என் நேசர்” என்று மட்டும் எத்தனை முறை வருகின்றது?
5. யார் எதனால் திருப்தியடைவதில்லை?
6. தேவன் எவைகளையெல்லாம் நியாயத்திலே கொண்டுவருவார்?
7. பாவியானவன் எதைக் கெடுப்பான்?
8. எப்பொழுது எதைக் காத்துக்கொள்ளவேண்டும்?
9. என் நேசர் .................... ..................... பதினாயிரம் பேரில் ........................... (நிரப்புக).
10. உத்தமன் யார்?

Bro.I.சைமன்,
சபை ஊழியர்.

## January 2015 வேதவினா போட்டிக்கான சரியான பதில்கள்

1. அறிவுள்ள உதடுகள் - நீதி. 20:15
2. கர்த்தரை நம்புகிறவன் - நீதி. 29:25
3. மேட்டிமையான கண், பொய் நாவு, குற்றமற்றவர்களுடைய இரத்தம் சிந்தும் கை, துராலோசனையைப் பிணைக்கும் இருதயம், தீங்கு செய்வதற்கு விரைந்தோடுங் கால், அபத்தம் பேசும் பொய்சாட்சி, சகோதரருக்குள்ளே விரோதத்தை உண்டுபண்ணுதல் - நீதி. 6:16-19
4. உண்மையுள்ள மனுஷன் - நீதி. 28:20
5. செம்மையானவர்களின் ஜெபம் - நீதி. 15:8
   நீதியைப் பின்பற்றுகிறவனை - நீதி. 15:9
6. வேதத்தைக் கேளாதபடி தன் செவியை விலக்குகிறவன் ஜெபம் - நீதி. 28:9
7. உத்தமமாய் நடக்கிறவர்களுக்கு - நீதி. 2:7
8. மாறுபாடுள்ள இருதயம் உடையவர்கள் - நீதி. 11:20
   உத்தம மார்க்கத்தார் - நீதி. 11:20
9. சத்திய உதடு - நீதி. 12:19
10. பொய் உதடுகள் - நீதி. 12:22, 11:1, 15:8, 15:26, 20:10, 20:23

## January 2015 வேதவினா போட்டி சரியான பதில் எழுதியவர்கள்

1. திருமதி. சாந்தினி ராஜன்
2. திருமதி. மெர்லின் விஜில்
3. திருமதி. எஸ்தர் ரவி சாமுவேல்
4. திரு. V. மோகன்
5. திருமதி. ஜோன் டேவிட்
6. திருமதி. அபிதா அனிஷ்
7. திருமதி. ரீட்டா ஆன்றோ
8. திருமதி. சுகுணா தங்கமணி
9. திருமதி. N.ஜேனட்
10. திருமதி. லதா ராஜன்
11. திருமதி. செல்லா ஆலன்
12. திருமதி. நிர்மலா பேட்ரிக்
13. திருமதி. ஷீபா சிகாமணி
14. திருமதி. ஜாக்குலின் கெவின்
15. திருமதி. ஆன் ஆஷா கால்டுவெல்
16. திருமதி. S.பாத்திமா மேரி செல்வராஜ்
17. திருமதி. கிரேஸ்லி புஷ்பம் ராஜன்
18. திரு. J.ஜான்சன் ஜெபராஜ்
19. திருமதி. இனிதா ஜோனா
20. திருமதி. அனித்தா ஆல்வின்
21. திருமதி. பிளாரன்ஸ் ஜான்
22. திருமதி. ரெத்னா ஜான்சன்

## Stomach ulcers & its prevention

Stomach (gastric/peptic) ulcers, are open painful sores that develop on the lining of the stomach or small intestine. It can also occur in part of the intestine just beyond the stomach known as duodenal ulcers. They occur when the thick layer of mucus that protects the stomach from digestive juices is reduced. According to the American Gastroenterological Association, an estimated 4 million people have stomach ulcers and one in 10 people will develop the condition over their lifetime (AGA). Stomach ulcers are easily cured; however, they can become severe without treatment.

### Causes of stomach ulcers:

- Helicobacter pylori (H. pylori) bacteria, which can irritate the stomach or upper intestine lining.
- Use of painkillers called nonsteroidal anti-inflammatory drugs (NSAIDs), such as aspirin, naproxen (Aleve, Anaprox, Naprosyn, and others), ibuprofen (Motrin, Advil, some types of Midol, and others).
- Imbalance between digestive fluids in the stomach and duodenum.
- Excess acid production from gastrinomas, tumors of the acid producing cells of the stomach that increases acid output (seen in Zollinger-Ellison syndrome)
- Smoking or chewing tobacco.
- Stress
- Excessive drinking of alcohol.
- Serious illness
- Radiation treatment to the area

### Symptoms of stomach ulcer:

- Burning or gnawing pain that develops in abdomen (tummy), it can also travel up to the neck, down to navel (belly-button) or through the back, last from a few minutes to a few hours, starts soon after eating a meal. If the ulcer is in small intestine (duodenal ulcer), pain may start two to three hours after eating so it may wake you up during the night.
- Some people also find they can no longer tolerate eating fatty foods.
- Eating more food and taking antacids (indigestion medication) can often help relieve the pain of a duodenal ulcer, but not usually the pain of a stomach ulcer.

- Indigestion
- Heartburn, Nausea or vomiting
- Loss of appetite
- Being sick
- Bloating

In severe cases, symptoms can include:

- Dark or black stool (due to bleeding)
- Vomiting blood (that can look like "coffee-grounds")
- Weight loss

Diagnosis:

- To rule out H. pylori infection, a blood, stool, or breath test
- Barium X-Ray
- Endoscopy
- Endoscopic Biopsy

Treating Stomach Ulcers

- Treatment will vary depending on the cause of ulcer. If stomach ulcer is the result of H. pylori, need antibiotics. For mild to moderate stomach ulcers, your physician will usually prescribe the following medications:
- H2 blockers: to prevent your stomach from making too much acid
- Proton pump inhibitors: blocks the cells that produce acid
- Over-the-counter antacids: to help neutralize stomach acid
- Cytoprotective agents: to protect the lining of the stomach and small intestine, such as Pepto-Bismol

Prevention of Stomach Ulcers:

- Reduce risk of bacterial infection by washing hands with soap and water on a regular basis and make sure that all food is properly cleaned and cooked thoroughly.
- stop using NSAIDs, medications (if possible) or limit their use. In you need to take NSAIDs, be sure to follow the recommended.
- Certain lifestyle changes can also help prevent ulcers from forming.
- Quit alcohol consumption, smoking and other tobacco use
- Eat healthy diet rich in fruits, vegetables, and whole grains
- Avoid foods that irritate your stomach. If any food upsets your stomach avoid it. Everyone is different, but spicy foods and fatty foods are common irritants.
- Learn how to control your stress levels. Regular exercise and mind-body relaxation techniques are often helpful.

"REJOICE IN THE LORD ALWAYS & MEDITATTE UPON GOD'S WORD"

Merlin Vijil.

# BIRTHDAY CELEBRANTS - FEBRUARY 2015

## DUBAI

01 Miss Joelin Sweety Jefferson
01 Miss Anntly Abigail John
01 Mr. Mithran Vethanayagam
02 Mrs. Jinny Anlet Bai Raju
02 Mr. Aron John Paul M
02 Mrs. Niffia Janyfel Kim
02 Master Jared Damian Jubin Mancil
03 Mr. P. Selvin Lloyd
03 Mrs. Deepa Sam Christenson
03 Mr. Kishore Berty
03 Mrs. Elizabeth Poornima John Karthick
04 Mr. N. Davidson Mony
04 Mr. S. Alwin Sam
04 Master Ethan David Sathish Paul
04 Mr. R.Abishek
05 Mrs. Sheeja Kingsley
05 Mr. T. Vino Thampi Raj
05 Miss Arun Suvithra
05 Mr. Pearlson Paul Rajan Muthiah
06 Mr. Arthur Arul Daniel
06 Master. Kevin Samuel David Nelson
06 Master. Kenovin Paul Rajesh Kanna
06 Miss Angel Sara Thangamani
06 Mr. I. Felix Davamani Rajapaul
07 Mrs. Joyce Priya Thilak
07 Mrs. Sheeja Robinson
07 Master. Kenneth Singh
07 Mrs. Evangelin Karuna Raslin Jose
07 Miss Katelyn Jolina Steward Jones
08 Mr. N. Selvam
08 Miss Ann Sam Christenson
08 Miss Jovita Angelin Jesintha David
09 Mrs. Kanchana Mala Devi Ranjit
09 Mrs. Vonica Stephen Thangaraj
09 Mr. P. Ebenezer Raj
09 Miss Nickolyn Nixon
09 Miss Joanna Arlene Christin Solomon
09 Master Steve Austin Sobers
10 Mrs. Prema Ravi Raj
10 Master Ashir Benjamin Daniel Pradeep
11 Mrs. Prema Mohana Dhas
11 Miss Felicia Joselyn Kingston Jose
11 Master. Alan Sam Christenson
11 Mrs. Sharon Jeba Vincent Rajaiah
12 Mrs. Maniba Babu
12 Mr. R. Jefferson
12 Master Albert Vairavanathan
12 Mr. D.Sathish Paul
13 Master. Anderson Paul Joseph
13 Miss Steffi Sunder Raj
13 Miss J.Evangeline
14 Mr. Roy Rohan Richard
14 Mr. M. Durai Raj
14 Master. Rory Dan Prince
14 Mr. N. Jeba Sobitha Raj
14 Mrs. Beulah Rajamalar Jayasingh
14 Master Johan Charles Spurgeon

15 Master. Bevin John Ralsten
15 Mrs. Vasanthi Rajasekaran
15 Mr. J. Albert Samraj
15 Mr. Sobers Wilson
16 Mr. D.M.John Kennady
16 Mrs. Sornavalli Godwin
16 Mrs. Jeraldlin Glenis Sam Kingston
16 Dr. Celia Daniel Pradeep
17 Mr. Jacob Samuel J.
17 Mr. M. Raju
17 Mr. Edwin Charles
18 Master Shane Fair Justinraj
18 Mrs. Paulin Regina Mary Samuel
19 Mr. V. Selvan Devasagayam
19 Master. Paul Bens Samuel Sam Bennet
19 Mr. Alwin China Thangam
20 Mrs. Jeba Vinitha Jefferson
20 Master. Cheeresh Satheesh
20 Mr. Vijayasekar Samuel
20 Master Jacob John Wilson
20 Miss Ashniya Nidheesh
21 Master. Jeffrey John Herbert
21 Mr. K. Ravikumar
21 Master Shawn Dominic Sathya
22 Mrs. Mary Punitha Dhas
23 Mrs. Dorathy Juliet Sujatha Newton
23 Mr. V. Moses
23 Mr. Joel Ravi Samuel
23 Mrs. Nandhini Daniel Mathan
23 Mr. Ashwin Vijayasekar Samuel
24 Mr. Roy T. Daniel
24 Mr. Ben Selvan Samuel
24 Miss Jane Olive C Jebaraj
25 Mr. Ramesh Peter R.
25 Mrs. Caroline Jenita Kingson
25 Master Beril Doss Anna Suthan
25 Mr. V.Vijai Kemil Singh
26 Master. Jethro Adriel Julian
26 Miss Catherine Edwin Rajkumar
26 Miss Daphne Suresh
26 Master Arshan Bibin
27 Mrs. Sheela Joylin Raj Kumar
27 Mr. Benhar Jowin Ilangovan
27 Mrs. Angela Roshini Benhur
27 Mrs. Priscilla Devamani Karunagaran
27 Mr. Paul Karunagaran
27 Master Efraiyn Rishon Manuel Selva Subin
27 Miss Kalista Rajesh Kadaksham
28 Mrs. Jenipha Godwin
28 Mr. Johnson Benjamin

## FUJAIRAH

05 Mrs. Nirmala Rose Joseph
05 Mr. C.Solomon
05 Mr. Merison Arputharaj
06 Mr. Mebin Arputharaj
08 Master Hans Oswin Shah Atnan
09 Master. Eugine Delight Pannir Selvam
17 Mr. Saju Joseph Edwin
18 Mr. K.Shajimon
23 Mr. R. Anburajakumar
24 Miss Danica Paulin Sam Kingsly
27 Mrs. Merlin Shoba Chella Raja

## RAS AL KHAIMAH

03 Miss Jebisha Shermi Yesu Neson
07 Mrs. Sheeba Jacob Rajkamal
09 Master Blessin Durai
10 Mr. P.Samuel Subi
17 Mr. S.A. Durai
18 Mrs. Selvi Johnson
19 Miss Edlyn Thayal Durai Rajan
28 Miss Irine Shobi Anantharaj

# WEDDING ANNIVERSARY CELEBRANTS - FEBRUARY 2015

## DUBAI

03 Mr. & Mrs. Prayervin Jino
04 Mr. & Mrs. Sobers Wilson
05 Mr. & Mrs. Christy Chandra Mohan
07 Mr. & Mrs. A. Johnson
07 Mr. & Mrs. C.Steephon
08 Mr. & Mrs. T. Basewel Thomas
08 Dr. & Mrs. T.S. Manoj Kumar
08 Mr. & Mrs. J. Godwin Dinker
08 Mr. & Mrs. G. Asirvatham
10 Mr. & Mrs. Vijayasekar Samuel
10 Mr. & Mrs. J. James Kumar
11 Mr. & Mrs. Paul Arul Jose
11 Mr. & Mrs.Samuel Natarajan
11 Mr. & Mrs. D. Jeevin Maxwell
12 Mr. & Mrs. R. Inbakumar
14 Mr. & Mrs. John Dennis
15 Mr. & Mrs. J.David Jayakumar
18 Mr. & Mrs. N. Davidson Mony
19 Mr. & Mrs. R.Davidson
20 Mr. & Mrs. Ashwin Vijayasekhar
20 Mr. & Mrs. Vijay Kiran
21 Mr. & Mrs. Sathiya Nesan Martin
25 Mr. & Mrs. Jayaseelan Dennis
26 Mr. & Mrs. David Alexander
27 Mr. & Mrs. Lesley Sampath Kumar

## FUJAIRAH

04 Mr. & Mrs. Jaya Christopher
05 Mr. & Mrs. Benjamin Sampath Kumar
08 Mr. & Mrs. Navaneetha Kannan
11 Mr. & Mrs. H. Ramesh Kumar

## RAS AL KHAIMAH

03 Mr. & Mrs. Joseph Retna Raj. T
11 Mr. & Mrs. A. Paul Raj

# தினசரி வேத வாசிப்புப் பகுதிகள் - பிப்ரவரி 2015

வாக்குத்தத்த வசனம்
"உன் பிள்ளைகளெல்லாரும் கர்த்தரால் போதிக்கப்பட்டிருப்பார்கள்;
உன் பிள்ளைகளுடைய சமாதானம் பெரிதாயிருக்கும்." ஏசாயா 54:13

| தேதி | கிழமை | காலை | மாலை |
|---|---|---|---|
| | | சங்கீதம் | புதிய ஏற்பாடு |
| 1 | ஞாயிறு | 26 | 1 கொரிந்தியர் 7:21-40 |
| 2 | திங்கள் | 27 | 1 கொரிந்தியர் 8 |
| 3 | செவ்வாய் | 28 | 1 கொரிந்தியர் 9 |
| 4 | புதன் | 29 | 1 கொரிந்தியர் 10:1-17 |
| 5 | வியாழன் | 30 | 1 கொரிந்தியர் 10:18-33 |
| 6 | வெள்ளி | 31 | 1 கொரிந்தியர் 11:1-16 |
| 7 | சனி | 32 | 1 கொரிந்தியர் 11:17-34 |
| 8 | ஞாயிறு | 33 | 1 கொரிந்தியர் 12:1-15 |
| 9 | திங்கள் | 34 | 1 கொரிந்தியர் 12:16-30 |
| 10 | செவ்வாய் | 35:1-14 | 1 கொரிந்தியர் 13 |
| 11 | புதன் | 35:15-28 | 1 கொரிந்தியர் 14:1-20 |
| 12 | வியாழன் | 36 | 1 கொரிந்தியர் 14:21-40 |
| 13 | வெள்ளி | 37:1-21 | 1 கொரிந்தியர் 15:1-20 |
| 14 | சனி | 37:22-40 | 1 கொரிந்தியர் 15:21-40 |
| 15 | ஞாயிறு | 38 | 1 கொரிந்தியர் 15:41-58 |
| 16 | திங்கள் | 39 | 1 கொரிந்தியர் 16:1-12 |
| 17 | செவ்வாய் | 40 | 1 கொரிந்தியர் 16:13-24 |
| 18 | புதன் | 41 | 2 கொரிந்தியர் 1:1-12 |
| 19 | வியாழன் | 42, 43 | 2 கொரிந்தியர் 1:13-24 |
| 20 | வெள்ளி | 44:1-13 | 2 கொரிந்தியர் 2 |
| 21 | சனி | 44:14-26 | 2 கொரிந்தியர் 3 |
| 22 | ஞாயிறு | 45 | 2 கொரிந்தியர் 4 |
| 23 | திங்கள் | 46 | 2 கொரிந்தியர் 5 |
| 24 | செவ்வாய் | 47 | 2 கொரிந்தியர் 6 |
| 25 | புதன் | 48 | 2 கொரிந்தியர் 7 |
| 26 | வியாழன் | 49 | 2 கொரிந்தியர் 8:1-12 |
| 27 | வெள்ளி | 50 | 2 கொரிந்தியர் 8:13-24 |
| 28 | சனி | 51 | 2 கொரிந்தியர் 9 |
| | | | |
| | | | |
| | | | |

ஜெப வசனம்
"கர்த்தாவே, நீர் ஸ்தோத்தரிக்கப்பட்டவர்;
உம்முடைய பிரமாணங்களை எனக்குப் போதியும்." சங். 119:12

# தென் இந்தியத் திருச்சபை
## தமிழ் சபை – துபாய்

### ஆராதனை ஒழுங்குகள்

| நாள் | நேரம் | ஆராதனைகள் |
|---|---|---|
| **பரிசுத்த திரித்துவ ஆலயம், துபாய்** | | |
| 1-ம் தேதி | காலை 5:30 மணி | திருவிருந்து ஆராதனை |
| வெள்ளிதோறும் | காலை 6:00 மணி | திருவிருந்து ஆராதனை |
| 1,3-ம் வெள்ளி | காலை 7:30 மணி | திருவிருந்து ஆராதனை |
| 2,4-ம் வெள்ளி | காலை 7:30 மணி | காலை ஆராதனை |
| 5-ம் வெள்ளி | காலை 7:30 மணி | காலை சிறப்பு ஆராதனை |
| 1-ம் சனி | காலை 11:00 மணி | திருவிருந்து ஆராதனை |
| 2,3,4,5-ம் சனி | காலை 11:00 மணி | காலை ஆராதனை |
| **கிறிஸ்துநாதர் ஆலயம், ஜெபல் அலி** | | |
| 2,4-ம் வெள்ளி | மாலை 6:00 மணி | திருவிருந்து ஆராதனை |
| 1,3-ம் வெள்ளி | மாலை 6:00 மணி | மாலை ஆராதனை |
| 5-ம் வெள்ளி | மாலை 6:00 மணி | பாடல் ஆராதனை |
| **ஃபுஜைரா திருச்சபை** | | |
| 1-ம் தேதி | இரவு 8:00 மணி | திருவிருந்து ஆராதனை |
| 1,3-ம் வியாழன் | இரவு 7:30 மணி | திருவிருந்து ஆராதனை |
| 2,4,5-ம் வியாழன் | இரவு 7:30 மணி | மாலை ஆராதனை |
| **இராஸ் அல் கைமா திருச்சபை** | | |
| 1-ம் தேதி | இரவு 7:30 மணி | திருவிருந்து ஆராதனை |
| 1,3-ம் வெள்ளி | இரவு 7:30 மணி | திருவிருந்து ஆராதனை |
| 2,4,5-ம் வெள்ளி | இரவு 7:30 மணி | மாலை ஆராதனை |

தபால் பெட்டி எண்: 8785, துபாய். தொ.பேசி:04-2824696.
தொ.நகல்: 04-2826162, செல்: 050-5533645.
email: csitapar@emirates.net.ae, Web: www.csitamilparishdubai.org

# PHOTO GALLERY








FUJAIRAH - CHRISTMAS TREE FUNCTION

# PHOTO GALLERY

## RAS AL KHAIMAH - CHRISTMAS TREE FUNCTION







# PHOTO GALLERY







JUNIOR CHURCH ANNIVERSARY - DUBAI